
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1292

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


# மாநாடு

ர.பிரகாசு

128

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## சமஸ்கிருதம் - இந்தி அறிவுக்கு உதவாது!

தமிழ்நாட்டின் வரலாற்றில், முதல் மொழிப்போர் தொடங்கிய ஆண்டு, 1938. ஆனால், இந்தியைத் திணிக்கப் பிற்காலத்தில் முயல்வார்கள், அதனால் ஏற்படப்போகும் ஆபத்துகள் என்ன, தீர்வுகள் என்ன என்பதைச் 'சுயமரியாதை இயக்கம்' அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தெளிவான சிந்தனையைக் கொண்டிருந்தது. 07.06.1931 அன்று நன்னிலத்தில் நடைபெற்ற தாலுகா அளவிலான சுயமரியாதை மாநாட்டில் அது தெளிவாகத் தெரிந்தது.

மாநாட்டிற்கு திருவாரூர், நாகை, கும்பகோணம், காரைக்கால், மன்னார்குடி, சீர்காழி உள்ளிட்ட ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 1,500-க்கும் மேற்பட்டோர் வருகைதந்தனர். நன்னிலம் யூனியன் தலைவர் பங்களாவிலிருந்து மேள வாத்தியங்கள் முழங்க, மாநாட்டுப் பந்தலுக்குத் தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

தொடக்கத்தில் சிலர், சுயமரியாதைப் பாடல்கள் பாடினர். அதன் பிறகு, சௌரிராஜன் என்பவருக்கும் கண்ணுமாரிமுத்து அம்மாள் என்பவருக்கும் 'சுயமரியாதைத் திருமணம்' நடைபெற்றது. மணமக்களைப் பற்றியும் சுயமரியாதைத் திருமணத்தின் தன்மை பற்றியும் சில வார்த்தைகள் பேசிய பின், பெரியார் இத்திருமணத்தை நடத்திவைத்தார்.

எஸ்.ராமநாதன், நித்தியானந்தம், கும்ப கோணம் கே.எஸ்.சுப்பிரமணியம், ராமாமிர் தம்மாள், மரகதவள்ளி அம்மாள், பண்டிதர் பக்கிரிசாமி, மாயவரம் சி.நடராஜன் ஆகியோர் சுயமரியாதைத் திருமணத்தின் பெருமைகள் குறித்து அப்போது பேசினர்.

அதன்பிறகு, திருவாரூர் நகர மன்றத் தலைவராக இருந்த டி.கே.ராமசாமி வரவேற் புரை ஆற்றினார். 'உயர்வு என்பது எங்களுக்கே உரித்தான சுதந்திரம் என்று கூறிக்கொள்கிறார்கள் சிலர். அவர்களுக்கு மற்றவர்கள் யாவரும் தாழ்ந்தவர்கள். சிலர், அவர்கள் தெருவில் நடக்கக்கூடாது. அவர்களுடைய கிணறுகளில் தண்ணீர் எடுக்கக் கூடாது. சிலர், வீட்டு முகப்பு வரை செல்லலாம். சிலர் வீட்டுக்கு உள்ளே போகலாம், ஆனால் துணி, ஜலத்தைத் தொடக் கூடாது; அவர்கள் சாப்பிடும் பாத்திரங்களைப் பார்க்கக் கூடாது; சமைப்பதைப் பார்க்கக் கூடாது; என்று எத்தனையோ பிரிவுகளை ஏற்படுத்தி வைத்திருக்கி றார்கள்' என்றார்.

அதன் பிறகு, மாநாட்டுக்குத் தலைமை வகித்த சொ.முருகப்பா அவர்கள் பேசுகையில், 'கலப்பு மணம் செய்வதாலேயே சாதிச் சடங்கு முதலியவை பகுதிக்கு மேலாக ஒழிந்துபோகும்' என்றார். பின்னர், தந்தை பெரியாரும் தஞ்சை ஜில்லா ஆதி திராவிட சபைத் தலைவர் நாகை சிவராச சாமிப்பிள்ளை யும் பேசினர். தூத்துக் குடி, தஞ்சை, லால்குடி சுயமரியாதை மாநாடு களில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் இம்மாநாட்டில் ஏற்கப் பட்டன.

'பழைய புராணக் கதைகளைச் சொல்வதைத் தவிர, வேறு அறிவு வளர்ச்சிக்கு உதவாத சமஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாஷைகளை, நமது மக்கள் படிக்கும்படி செய்வது பார்ப்பனியத்திற்கு மறைமுகமாக ஆக்கம் தேடுவதே ஆகும். தற்கால விஞ்ஞான அறிவை நமது மக்களிடையே பரப்பவும், நவீன தொழில் முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்தவும் மற்ற தேசங்களில் எழும்பி இருக்கும் சீர்திருத்த உணர்ச்சியை நமது மக்களிடையே தோற்றுவிக்கவும், உலக பாஷையாக விளங்கிவரும் இங்கிலீஷ் பாஷையை நமது வாலிபர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்' என்று இம்மாநாடு வலியுறுத்தியது.

ஆதி திராவிடர்களுக்குத் தனித்தொகுதி வேண்டும், சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு தினசரி பத்திரிகை விரைவில் தொடங்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

...கூட்டம் திரளும்

## ஜனநாயகத்துக்குப் பொருந்தாத அதிகாரப் பித்து!

"கொலை, பாலியல் வல்லுறவுக் குற்றங்களுடன்தான் தமிழ்நாட்டில் இன்றைய நாட்கள் விடிகின்றன. குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவரிடையே பரவிவரும் குழுவாத கொலைவெறித் தாக்குதல்கள் மிகுந்த துயரத்தையும், எதிர்காலம் குறித்த கவலையையும் ஏற்படுத்துகின்றன" என்று அச்சம் தெரிவித்துள்ளார், எழுத்தாளர் அழகிய பெரியவன். அவரது முகநூலில் இருந்து...

இந்தக் கொலைகள், கும்பல் தாக்குதலால் நடத்தப்படும் கொலைகள். குழு என்பது விதிகளால் ஒருங்கிணைக்கப்படுவது. ஆனால், கும்பல் என்பது அப்படியானதல்ல. கும்பல் மனோபாவத்தை, சமூகத்தில் இருந்துவரும் பல்வகையான இயங்கியல் கூறுகளே உருவாக்கிச் செயல்படுத்துகின்றன. 'கும்பல் என்றால் சாதிவெறி'. 'கும்பல் என்றால் மதவெறி'. 'கும்பல் என்றால் ஆதிக்க வெறி'. 'கும்பல் என்றால் ஜனநாயகத்துக்குப் பொருந்தாத அதிகாரப் பித்து'. 'கும்பல் என்றால் ஒருவரோ அல்லது ஒருசாராரோ கைப்பற்ற நினைக்கும் சுயநல வெளிப்பாடு'. இந்தக் கூறுகள், மாணவரிடையே அதிகரித்து உள்ளன. இந்தக் கூறுகளில், அவர்கள் ஒன்றுசேர்ந்து இயங்குகிறார்கள். இந்தக் கூறுகளின் அடிப்படையிலேயே, தங்களை எதிர்க்கிற அல்லது இடையூறாக இருக்கிற ஒருவனை அடித்துக் கொல்கிறார்கள்.

அண்மையில் வெளியான, 'ஜனநாயகன்' 'டிசி' போன்ற படங்களின் காட்சிகளில் கொல்லப்படுகின்ற மனிதர்களையும், தெறிக்கும் ரத்தத்தையும், பயன்படுத்தப்படும் ஆயுதங்களையும் நினைவில் கொண்டுவாருங்கள். நல்ல மனநிலையில் இருப்பவர்களுக்கு, நிச்சயமாக நடுக்கம் ஏற்படும். சாதாரணமாக, ஒரு காம்பஸ் குத்துவதையே வலியென்று உணரும் மாணவன், இந்தக் காட்சிகளின் தாக்கத்தை இன்பமாக உணர்கிறான். இது, கொடூரமான சாடிச மனோநிலையைக் கட்டமைக்கிறது.

அரசும் அரசின் ஆயுதமான காவல் துறையும் எல்லாவற்றிலும் தலையிட்டு, ஆய்வு மேற்கொள்ள வேண்டும். பள்ளி, கல்லூரி வளாகங்களிலும் சுற்றுப்புறத்திலும் குறிப்பிட்ட இடைவெளியில் சோதனைகளை நடத்த வேண்டும். சி.சி.டி.வி. பதிவுகளையும் 'மாணவர் மனசு' பெட்டி புகார்களையும் ஆராய்ந்து, பள்ளி, கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்லூரிகளில் பெயரளவில் இருக்கும் 'பட்டியலின மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டி மையம்', 'சிறுபான்மை மாணவர் வழிகாட்டி மையம்', 'மாணவியர் ஆலோசனை மற்றும் வழிகாட்டி மையம்' ஆகியவற்றை உயிரூட்டி நடத்த வேண்டும். கூடுதலாகப் போதை மற்றும் ஊடக பாதிப்பால் வழிதவறும் மாணவர்களுக்கு, 'மனநல ஆலோசனை மையம்' ஒன்றையும் ஒவ்வொரு கல்லூரியிலும் பள்ளிகளிலும் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும். சமூகச் சீரழிவுக் கூறுகளை இயல்பானதாகச் சித்திரிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் தொடங்குகிற இடத்திலிருந்துதான் எல்லா வகையான ஆபத்துகளும் தொடங்குகின்றன" என்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்



'கிளாட்வின்' பாக்கியராஜ்



### எனது வாழ்நாள் வாய்ப்பு!

2014-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து எடுத்துக்கொண்ட படம். தலைவருடன் ஒரு புகைப்படமாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது என் வாழ்நாள் ஆசை. அதை, எங்கள் மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அண்ணன் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அவர்களிடம் தெரிவித்தேன். அடுத்த நாளே, அண்ணா அறிவாலயம் அழைத்துச்சென்றவர், "இவர் என் நண்பர் ஆரியின் மகன்; பழைய கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; தற்போது, குவைத்தில் இருந்து வந்திருக்கிறார்" என்று கூறி, தலைவரிடம் அறிமுகப்படுத்திவைத்தார். இந்தப் புகைப்படம், என் வாழ்நாள் முழுவதும் பெருமையளிக்கிறது.

– 'கிளாட்வின்' பாக்கியராஜ்,
ஒருங்கிணைப்பாளர், தி.மு.க. தளபதி பேரவை, குவைத்.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

128

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## அதிகாரக்குவிப்புக்கு எதிரான அறைகூவல்!

தி.மு.கழகம் அதன் தொடக்ககாலத்தில், 'திராவிட நாடு' கேட்ட சமயத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாகத் திகழ்ந்த முரசொலி மாறன் அவர்கள் எழுதிய நூலான, "ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்" பெரிய வரவேற்பைப் பெற்றது, அந்த நூலுக்கு பேரறிஞர் அண்ணா ஒரு அறிமுக உரை எழுதி இருப்பார். 1957-ஆம் ஆண்டு, 'முத்து வேல் பதிப்பகம்' அந்நூலை வெளியிட்டுள்ளது.

மாறனின் கருத்தாழமும் அறிவுக்கூர்மையும் அவரை வாசிப்பவருக்குத் தெரியும். உலக அறிஞர்களின் மேற்கோள்கள், உள்ளூர் அரசியல்வாதிகளின் மேற்கோள்கள், எளிதில் புரியம் உவமைகள் என ஒரு அற்புதக் கலவையாக இந்த நூலை எழுதி இருப்பார்.

தி.மு.க. ஒரு அரசியல் கட்சி அல்ல அது ஒரு அரசியல் இயக்கம் என்று தலைவர்கள் சொல்லிக் கேட்டிருப்போம். இரண்டுக்கும் நிறைய வித்தி யாசம் உள்ளது. இங்குள்ள மற்ற கட்சிகளுக்குக் கொள்கை யை வகுக்க, கோட்பாடுகளைப் பரப்புவதைப் பற்றி கவலை இல்லை. தேர்தல் வந்தால், வாக்குறுதிகளுடன் மக்களைச் சந்திக்க வருவார்கள், தேர்தல் முடிந்த பின் ஒதுங்கிக் கொள் வார்கள். ஆனால், தி.மு.க. இயங்கிக்கொண்டே இருக்கும். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மக்கள் போராட்டங்களில் உடன் நிற்கும். அதன் கொள்கைகள், மாநாடு கள் மூலமும் பொதுக் கூட்டங்களிலும் புத்தகங்கள் வாயிலாகவும் பரப்பப்பட்டுக் கொண்டே இருக்கும்.

> 'தமிழ் தேசியம்' பேசுபவர்களுக்கு இது ஓர் அறிவாயுதம், திராவிடம் பேசுபவர்களுக்கு இது ஓர் இலக்கண நூல்.

இன்றைக்கு தேசிய இனங்கள் பற்றிப் பேசுபவர்கள் இனவாதமும் ஆதிக்க வாதமும் பேசிவருகிறார்கள். ஆனால், 'திராவிட நாடு' கோரிக்கை உச்சத்தில் இருந்த சமயம், ஒரு அறிவுச் செழுமை நிறைந்த புத்தகத்தை எழுதி, இயக்கத்திற்கு வலு சேர்த்துள்ளார், மாறன்.

பிரிவினைத் தடைச் சட்டம் வந்த பிறகு, 'திராவிட நாடு' கோரிக்கை கைவிடப்பட்டு, 'மாநில சுயாட்சி'யாக உருப் பெறுகிறது. அதன் பின், முரசொலி மாறன் எழுதிய 'மாநில சுயாட்சி' நூலிலும் 'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்' எனும் இந்நூலின் சாயலைப் பார்க்கமுடியும்.

இந்தப் புத்தகத்தில் நேரு, அம்பேத்கர், டி.எம்.பணிக்கர், ஆச்சார்யா, மஸ்ஸினி, ஜான் ஷெல்லி போன்றவர்களின் தேசியம் குறித்த கருத்துகளை மேற்கோள் காட்டி, 'திராவிட நாடு' கோரிக்கைக்கு வலு சேர்த்துள் ளார் மாறன் அவர்கள்.

'தமிழ் தேசியம்' பேசுபவர்களுக்கு இது ஓர் அறிவாயுதம், திராவிடம் பேசுபவர்களுக்கு இது ஓர் இலக்கண நூல். ஒன்றியத்தில் அதிகாரக் குவிப்புக்கு எதிராக, தென்னிந்தியாவில் எழுப்பப்பட்ட மிக முக்கியமான கோரிக்கையின் அரசியல் நியாயங்களைத் தெளிவாக விளக்கும் இந்நூல், அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

...வாசிப்போம்.

## கருவூலம்

### கண்காட்சியும் விருதும்!

1956-ஆம் ஆண்டு, 'திருச்சி இரண்டாவது மாநில மாநாடு', தேர்தல் சிறப்பு மாநாட்டில் மக்களின் அறியாமை யைப் போக்கும் வகையிலான, கண்காட்சியைக் கழக முன்னோடி என்.வி.நடராசன் திறந்துவைத்தார். 'உலகை மாற்றிய தலைவர்கள்', 'விஞ்ஞான முன்னேற்றத்தின் விளக்கங்கள் அடங்கிய அந்த ஓவியக் கண்காட்சி, அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. டி.என்.இராஜரத்தி னத்தின் நாதசுர இசையும், 'கலைவாணரின் புத்தர் வரலாறு' வில்லுப்பாட்டும் நடைபெற்றன. மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருக்கு 'தி.மு.க. விருது' வழங்கிப் பாராட்டினார், பேரறிஞர் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900